## 12. பணமும் வட்டிவீதங்களும்

வங்கித் தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக உள்நாட்டுக் கொடுகடனில் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்டபோதும் நாணய விரிவாக்க வீதம் மிதமாகவே காணப்பட்டது. அரச கடன்பாடுகளும் இறுக்கமான நாணயக் கொள்கையும் வட்டி வீதங்கள் உயர்வடையக் காரணமாயின.

### நாணய வளர்ச்சி

- ▲ 2000ஆம் ஆண்டின் நாணய வளர்ச்சி ($M_{2b}$) ஏறத்தாழ 13 சதவீதத்தில் உறுதியாகக் காணப்பட்டது. அனைத்துத் துறைகளுக்குமான அதாவது அரசு, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறைகளுக்கான உள்நாட்டுக் கொடுகடனின் வளர்ச்சி விரிவடைந்தபோதும், வங்கித்தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி நாணய வளர்ச்சியைக் குறைத்து விட்டது.
- ▲ மிதமான நாணய வளர்ச்சியானது பண வீக்கத்தின் மீதான கேள்வி அழுத்தத்தினை தடுத்துவிட்டது.

### நாணயக்கொள்கை

- ▲ நாணய மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளை உறுதிப் படுத்துகின்ற வேளையில் பொருளாதார நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு போதுமான திரவத்தினை வழங்குவதிலும் நாண யக் கொள்கை முக்கிய கவனம் செலுத் தியது. மத்திய வங்கியின் வட்டி வீதங்களை உயர்த்துவதன் மூலம் உறுதிப்பாட்டினை வழங்குவதற்காக நாணயக் கொள்கையானது குறிப்பாக இரண்டாம் காலாண்டில் இறுக்கமாக்கப்பட்டது.
- ▲ வெளிநாட்டு நாணய வைப்புக்களை ஊக்குவிக்கும் பொருட்டும் இடையீட்டுச் செலவுகளைக் குறைப்பதற்குமாக வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத்தேவைப் பாடுகள் நீக்கப்பட்டன.

### வர்த்தக வங்கிகளிலிருந்தான தனியார்துறைக்கான கொடுகடன்

- ▲ தனியார்துறைக்கான வர்த்தக வங்கிகளின் கொடுகடன் விரிவாக்கம் 1999 இன் 11 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 12 சதவீதத்திற்கு அதிகரித்தது. வர்த்தக வங்கிகளினால் தனியார் துறையினருக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ரூ.38 பில்லியனால் அதிகரித்தது.
- ▲ கொடுகடனில் உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்த துறைகளாக பணிகள், வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறைகள் மற்றும் வீடமைப்பு சொத்து அபிவிருத்திகள் எனபன விளங்கின.
- ▲ வங்கித்தொழில் முறையிலிருந்து அரசிற்குக் கிடைத்த கொடுகடன் குறிப்

பண வளர்ச்சியும் பண வீக்கமும்




வரைபடம் 12.1

மத்திய வங்கி வீதங்களில் மாற்றங்கள்

| நாள் | மீள் கொள்வனவு வீதம் | நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் | வங்கி வீதம் |
|---|---|---|---|
| 31 திெ. 99 | 9.25 | 13.48 | 16.00 |
| 5 சன. 00 | 9.00 | | |
| 21 சன. 00 | 9.00 | | |
| 9 மே . 00 | 9.25 | | |
| 12 மே .00 | | 13.25 | |
| 19 மே .00 | | 14.00 | |
| 8 யூன் .00 | 9.50 | 15.00 | |
| 26 யூலை .00 | 11.00 | | |
| 31 ஓக. 00 | 11.75 | | |
| 19 செத் . 00 | | 15.50 | |
| 26 செத். 00 | 12.50 | | |
| 29 செத். 00 | 13.00 | 16.00 | |
| 2 ஒத். 00 | | | 18.00 |
| 8 நவெ. 00 | 15.00 | 18.00 | 20.00 |
| 21 நவெ. 00 | 17.00 | 20.00 | 25.00 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 12.1

பிடத்தக்களவில் அதிகரித்தமைக்கு தனியார்மயப்படுத்தல் பெறுகைகள் தாமதமாகியதன் விளைவாக குறை வடைந்த மூலவளங்கள், அதிகரித்த பாதுகாப்புச் செலவினம் மற்றும் குறைவடைந்த வெளிநாட்டு நிதியிடல் என்பனவே காரணங்களாகும்.

▲ உயர்ந்த எண்ணெய் விலைகள் வங்கிக் கடன்பாடுகளை உயர்ந்தளவில் நாடுவதனை தேவைப்படுத்தியமையின் முக்கிய காரணமாக 2000ஆம் ஆண்டில் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிகளின் கொடுகடன் அதிகரித்தது.

## நீண்டகால கடன் வழங்கல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கொடுகடன்

▲ வர்த்தக வங்கிகளிலிருந்தான கொடுகடனுக்குப் புறம்பாக முதலீட்டாளர்கள் கணிசமான கொடுகடன் தொகைகளை நீண்டகாலக் கடன் வழங்கும் நிறுவனங்களான தேசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் இ.அ.நி.கூ. வங்கியிடமிருந்தும் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்தது.

▲ இரு நீண்டகால கடன்வழங்கல் நிறுவனங்களினாலும் வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் 1999இல் 14 சதவீதத்தினாலும் 2000ஆம் ஆண்டில் மேலும் 2 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

## வட்டிவீதங்கள்

▲ வட்டிவீதங்கள் 2000ஆம்ஆண்டு மே வரை வீழ்ச்சியடைந்தனவெனினும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் உயர்வடைந்தன. இவ்வதிகரிப்பிற்கு அதிகரித்த அரச கடன்பாடுகளும், சென்மதி நிலுவையில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறையிலிருந்து தோன்றிய திரவத்தன்மைக் குறைப்பு மற்றும் செலாவணி வீதத்தின் மீதான அழுத் தத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்பட்டமையுமே முக்கிய காரணங்களாகும்.

▲ வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்படும் மேம்பட்ட உறுதிப்பாடு உள்நாட்டு நிதியியல் மூலவளங்களுக்கான அரச துறையின் குறைவடைந்த கேள்வி என்பனவற்றின் காரணமாக 2001ஆம் ஆண்டுப்பகுதியில் வீதங்கள் குறைவடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

### தனியார் துறைக்கான கொடுகடன்




வரைபடம் 12.2

### தே.அ. வங்கி, இ.அ.நி.கூ வங்கி என்பவற்றிலிருந்து தனியார் துறைக்கான கொடுகடன்

(ரூ. மில்லியன்)

| | 1997 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|
| தே.அ.வங்கி | 22,782 | 30,553 | 35,557 | 35,667 |
| இ.அ.நி.கூ. வங்கி | 16,696 | 19,332 | 21,523 | 22,567 |
| மொத்தம் | 39,478 | 49,885 | 57,080 | 58,234 |

மூலம்: தேசிய அபிவிருத்தி வங்கி
இ.அ.நி.கூ. வங்கி

அட்டவணை 12.2

### வட்டி வீதங்கள்




வரைபடம் 12.3